**18.02.2020**

**அ.வ.எண்.232/2012**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வா.சா.1**

எனது சாட்சியத்தில் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டையை ராமதாஸ் என்பவருக்கு நான் மகன் என்றும் என் தாயார் லட்சுமி அம்மாள் என்பவர் மனைவி என்பதையும் காண்பிப்பதற்காக ஆவணங்கள் கொண்டுவந்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்து தான் தாவா சொத்து வாங்கியதாக இவ்வழக்கில் கூறிஉள்ளபடியால் அதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் மேலே கூறுவது போல் எந்த ஆவணமும் கிடையாது அவ்வாறு இருந்திருந்தால் நான் எனது வழக்கு வாதுரை உடன் அதனை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. என்னிடம் இருந்தது. வழக்கறிஞர் கேட்கவில்லை. தற்போதுகேட்டபடியால் நான் கொண்டு வந்துள்ளேன். பதில் உரையில் உள்ள விவரங்களை என் வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் சில விவரங்களை தெரிந்து கொண்டேன். வாதுரையில் 7ம் பிரதிவாதியின் கணவர் பெயரும் 8, 9 பிரதிவாதிகளின் தகப்பனார்

பெயரும் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று 'பதில் உரையில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எனது வாதுரையில் நான் தவறுதலாக குறிப்பிடவில்லை. சரியாக தான் குறிப்பிட்டுள்ளேன். அர்ச்சுனனின் மனைவி தான் 7ம் பிரதிவாதி குழந்தைகள் தான் 8, 9 பிரதிவாதிகள் என்பதை நிருபிப்பதற்கு ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த ஆவணங்கள் அவர்களிடம் தான் இருக்கும். என்னிடம் கிடையாது. எந்த ஆவணங்களை வைத்து நான் மேலே குறிப்பிட்டுள்ள விவரங்களை கூறுகின்றேன் என்றால் ஆவணங்கள் இல்லை. எனக்கு தெரிந்ததை வைத்து நான் கூறுகிறேன். என்னிடம் காட்டபடும் வாக்காளர் அட்டை யாருடையது என்றால் சின்னக்கா என்பவருடையது. அது பி.சா.ஆ.1 ஆகும். அந்த வாக்காளர் அட்டையில் சின்னக்கா என்பவரது கணவர் பெயர் 'ராமதாஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் ஆதார் அட்டை யாருடையது என்றால் சின்னக்கா என்பவருடையது அது பி.சா.ஆ.2 ஆகும். சின்னக்கா என்பவர் கணவர் பெயர் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ராமதாஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டபடும் ஆவணம் 8ம் பிரதிவாதி பரமேஸ்வரன் என்பவரின் வாக்காளர் அடையாள அட்டை என்றால் சரிதான்.

பி.சா.ஆ-3 ஆகும். அவருடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி பரமேஸ்வரன் தந்தை பெயர் ராமதாஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டபடும் ஆவணம் சின்னக்கா என்பவரது வங்கி கணக்கு புத்தகம் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.4 ஆகும். அதில் என் தந்தையின் பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. பின்பு எதன் அடிப்படையில் வங்கி புத்தகத்தில் பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறுகின்றேன் என்றால் பிரதிவாதிகள் என் தந்தையின் பெயரை தவறாக பயன்படுத்தி வருவதால் அதன் அடிப்படையில் கூறுகின்றேன். என்னிடம் காட்டபடும் ஆவணம் ராமதாஸ் என்பவருடைய குடும்ப அட்டையின் நகல் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.5 ஆகும். அதில் ராமதாஸ், சின்னக்கா , பரமேஸ்வரன் பெயர்கள் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டபடும் புகைப்படத்தில் உள்ள நபர் யார் என்றால் சின்னக்கா ஆகும். அந்த புகைப்படம் பி.சா.ஆ.6 ஆகும். என்னிடம் காட்டபடும் ஆவணம் குடும்ப அடையாள அட்டை அதில் உள்ள புகைப்படம் யார் என்றால் சாட்சி புகைப்படத்தை பார்த்து சின்னக்கா என்று கூறினார். அந்த ஆவணம் பி.சா.ஆ.7 ஆகும். என்னிடம் காட்டபடும ஆவணம் தான் ராமதாஸ் என்பவர்

இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.8 ஆகும். தாவா கிராமம் ஆன நெல்வாயிலில் சின்னக்கா என்பவர் வீடு கட்டி குடியிருந்து வந்தார். என்னிடம் காட்டபடும் ஆவணம் அவர் குடியிருந்த வீட்டுக்கு அவர் செலுத்திய வரி ரசீதுகள் அதில் சின்னக்கா க/பெ ராமதாஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.9 (2 எண்ணிக்கை) ஆகும். என்னிடம் காட்டபடும் ஆவணம் 1993முதல் 1998க்கான குடும்ப அட்டை நகல் (அசல் உரிய துறையில் சமர்பிக்கபடியால் நகல் தாக்கல் செய்யபடுகிறது.) அந்த ஆவணத்தில் ராமதாஸ் மேஸதிரியின் குடும்ப அட்டை என்றால் சரிதான். அது பி.சா-ஆ.10 ஆகும். அதில் சின்னக்கா, பரமேஸ்வரன் பெயர் உள்ளதா என்றால் எனக்கு எழுத்துக்கள் சரியாக தெரியவில்லை. சின்னக்கா என்பவர் ராமதாஸ் என்பவரின் மனைவியாக வாழ்ந்து வந்த படியால் தான் அரசாங்கம் அதனை அங்கிகரித்து அவரது பெயரில் குடும்ப அட்டை ஆவணங்கள் கொடுக்கபட்டுள்ளது என்றால் கொடுக்கபட்டுள்ளது. நான் இவ்வழக்கில் கூறுகின்றபடி சின்னக்கா ராமதாஸ்க்கு வைப்பாட்டி என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. சின்னக்கா என்பவர் எனது தகப்பனார் பெயரை தவறுதலாக பயன் படுத்தி உள்ளார். வா.சா.ஆ.1 1968ம் வருடம் எழுதப்பட்டது. அதில் ராமமதாஸ் மேஸ்திரி மற்றும் ராமதாஸ் மேஸ்திரியின் பாரியாள் சின்னக்கா

என்பவர்கள் சேர்ந்து தாவா சொத்தினை கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது அண்ணன் மற்றும் எனது அம்மா பெயரில் இருந்த எங்களது பூர்வீக சொத்தை விற்று தான் வா.சா.ஆ1க்கு உட்பட்ட சொத்து கிரயம் வாங்கபட்டது. வா.சா.ஆ.1ன் படி ராமதாஸ் என்பவர் மனைவி சின்னக்கா என்பது உறுதி செய்யபடுகிறது. ராமதாஸ் என்பவர் மனைவி சின்னக்கா என்று நான் வழக்குக்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ராமதாஸ் என்பவர் மனைவி எனது தாயார் லட்சுமி அம்மாள் என்றும் நான் ராமதாஸ் என்பவரது மகன் என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாதபடியால் இவ்வழக்கில் தாவா சொத்திற்கு நான் தான் உரிமையாளர் என்று கோருவது தவறு என்றால் சரியல்ல. ஆதாரம் உள்ளது. தாவா சொத்திற்கு 8,9 பிரதிவாதிகள் தான் உரிமையாளர்கள் என்றபடியால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.